**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 8 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணி | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | மணியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ஆவடி போக்குவரத்து பணிமனையில் உதவி கிளை மேலாளர் ஆக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணியில் இருந்தபோது 21.06.2018 ஆவடியிலிருந்து 323ஏவிஜே பக்கவாட்டு எண் எஸ் 47 என்ற மினி பஸ்சை ரவிகுமார் ஓட்டுநராகவும் உமாபதி என்பவர் நடத்துனராகவும் அன்று பணியில் இருந்ததற்கான சான்றினை வழங்கினேன். அன்றைய தினம் அந்த வண்டியை யாரோ இருசக்கர வாகனத்தில் வந்து பிரச்சனை செய்ததாகவும் பஸ் கண்ணாடியை உடைத்தாகவும் தகவல் கிடைத்தது அங்கு சென்று பார்த்தபோது ரவிகுமார் மருத்துவமனையில் சேர்க்கபட்டிருந்ததாக கேள்விபட்டேன் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இலலை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.17 10:14:09 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**
**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 9 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானபிரகாசம் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | Muthu | தொழில் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர**

**முதல் விசாரணை :**

நான் ஆவடி போக்குவரத்து பணிமனையில் உதவி கிளை மேலாளர் ஆக பணிபுரிந்து வந்தேன். நான் தற்போது அய்யப்பன்தாங்கல் பணிபணையில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் இருந்தபோது 21.06.2018 ஆவடியிலிருந்து 323ஏவிஜே பக்கவாட்டு எண் எஸ் 47 என்ற மினி பஸ்சை ரவிகுமார் ஓட்டுநராகவும் உமாபதி என்பவர் நடத்துனராகவும் அன்று பணி நியமிக்கப்பட்டு அவர்கள் சென்ற பஸ் பட்டாபிராம் உழைப்பாளர் நகர் அருகே சென்றதாகவும் அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் பிரச்சனை செய்து மேலும் 3 பேருடன் வந்து பஸ் திரும்பி வரும் போது தகாத வார்த்தைகளால் திட்டி பஸ் பக்கவாட்டு கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியும் சம்பவ இடத்திற்கு சென்றபோது அடிப்பட்ட ரவிகுமார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கேள்விபட்டேன். மேற்படி ஓட்டுநர் நடத்துநரிடம் அரசு பேருந்தின் சேதமதிப்பு எவ்வளவு என்று கேட்டபோது பக்கவாட்டு கண்ணாடி ரூ,250--, அன்றைய வருவாய் கலெக்சன் ரூ,1800--- மொத்தம் ரூ2050--- வருவாய் இழப்பு என்று 18.05.2019 அன்று சான்று வழங்கினேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்

**குறுக்கு விசாரணை** இலலை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.17 10:14:16 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.